O.S. No: 86/2015
பெயர்:ராஜலட்சுமி
**வா.சா. 1**
05/01/2023
**4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய சித்தி கமலாம்பாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கமலாம்பாளின் வாரிசுகளையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அம்மாவிற்கும் கமலாம்பாளுக்கும் எழுத்து மூலமான பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். கமலாம்பாளின் வாரிசுகள் தாவா சொத்தை 4 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வது குறித்து விற்பனை செல்லாது என்று சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் என்னுடைய சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் என்னுடைய சித்தியின் வாரிசுகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். காரணம் அது எங்களுக்கு கரவோலை படி பாத்தியப்பட்ட சொத்து என்பதால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.10 கரவோலை பதிவு செய்யப்படவில்லை. முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். கரவோலையில் என்னுடைய தகப்பனாரை சேரக்கவில்லை என்றால் சரிதான். காரணம் அவருக்கு வாரிகள் எதுவும் இல்லை. வா.சா.ஆ.10 கரவோலை என்னுடைய தகப்பனாரை சேரக்காத காரணத்தினாலும், பதிவு செய்யப்படாத காரணத்தினாலும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பாகம் கேட்டு அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் நேரடியாக கேட்டேன். 2015 ஆம் ஆண்டு பாகம் கேட்டேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. வாய்மொழியாக பாகம் கேட்டதாக வழக்குரையிலோ முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா

இறக்கும் போது என் தகப்பானர் உயிருடன் தான் இருந்தார். என் தகப்பனாருக்கும் சொத்தில் உரிமை இருந்ததால் நான் இந்த வழக்கில் 3/6 பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் 1966 இல் இறந்த பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை பாகம் கேட்டு எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 50 வருடங்களுக்கு பிறகு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு காலவரை சட்டத்தின் படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆகையால் நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.